பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182



# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06



கலையரசி நகைமாடம்



T.P- 0774357193


## தமிழ் மக்களுக்கான தனியானதொரு கட்டமைப்பு அவசியம்

தமிழினம் 30 வருட காலங்களாக அடக்குமுறைகளின் மூலம், தனக்கென ஒரு கட்டமைப்பை உருவாக்கி, கொள்கைகளை வகுத்து, அதன் வழியில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக அரசியல் சமூக செயற்பாடுகளை திறம்படச் செய்து வந்த வரலாறு உண்டு. பல கட்டமைப்புக்களை உருவாக்கி இளைஞர் - யுவதிகளை அரச தொழிலை நம்பி உருவாக்காமல் சொந்தக் காலில் அவர்கள் நிற்பதற்குத் தேவையான வேலைகளைச் செய்தது அந்தக் கட்டமைப்பு.

வீட்டினைத் தாண்டி சமூக ரீதியாக தமிழினம் உருவாக்கிக்கொண்ட அந்தக் கட்டமைப்பே மெதுமெதுவாக உலகளவில் பேசப்படும் விடயமாக மாறியது. உலக வல்லரசுகளை தமிழ் மக்களின் மீது பார்வையினைச் செலுத்தத் செய்தது. பல வரலாற்று ரீதியான சர்வதேச பேச்சுக்களை சர்வதேச மட்டத்தில் பேசவைத்தது. தமிழ் மக்கள் சிங்கள பேரினவாத அரசுகளால் அனுபவித்த சொல்லொனாத் துன்பங்களை வெளியுலகுக்கு எடுத்துக்கூறவைத்தது.

ஒரு இனம் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் அனைத்துத் துறைகளிலும் உயர்ந்த இடத்திற்குப் போகவேண்டுமெனில் அதற்கென உரு கட்டமைக்கப்பட்ட அமைப்பு தேவை. அக்கட்டமைப்பு தான் ஒரு இனத்தின் பலம் பலவீனம். கட்டமைப்பு இல்லாத இனம் பலவீனப்படுத்தப்படும். அழிவுக்குட்படுத்தப்படும். துண்டு துண்டாக சிதைக்கப்பட்டு இல்லாதொழிக்கப்படும். அவ் வினத்தின் அரசியல் இருப்பும் நிலமும் பறிபோய் குறித்த இனத்தின் அடையாளங்கள் முற்றாக அழிக்கப்பட்டு பிறிதொரு இனக் குழுமம் அவ்வினத்தை ஆக்கிரமித்து தமது அடையாளங்களை புதிதாக நிறுவும். பலமான இனம் கட்டமைப்பற்ற பலவீனமான இனத்தை அடிமையாக்கி நசுக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இதேபோன்றதொரு இக்கட்டான நிலையில் தான் இன்று தமிழினம் இருக்கிறது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் விடுதலைப்புலிகள் என்கிற மாபெரும் பலம், அவர்கள் வகுத்த எமக்கான கட்டமைப்புக்கள் எல்லாம் சிதைக்கப்பட்டதன் பின்னர், இன்று தமிழினம் கட்டமைப்பற்ற திறந்தபோக்கில் கடந்த 12 வருடங்களாக தடுமாறிக்கொண்டிருக்கிறது.

தமிழர் நிலங்கள் வட-கிழக்கில் பெரும்பான்மை இனமான சிங்களவர்களால் கையகப்படுத்தப்படுகிறது. தொல்லியல் திணைக்களம் என்கிற போர்வையில் தமிழர் பாரம்பரிய நிலங்களும், வழிபாட்டுத் தலங்களும் இன்று சிங்களவர்களின் வரலாற்றுச் சின்னம் என்று அடையாளப்படுத்தப்படுவதுடன், பௌத்த விகாரைகளின் எண்ணிக்கையும் கடந்த 12 வருடங்களில் பெருமளவில் அதிகரிக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

அத்துமீறிய குடியேற்றம் தமிழர்களை இல்லாதொழிக்கும் நோக்கமே என்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் இவ்விடயம் தொடர்பில் கரிசணை கொண்டு எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் அல்லது தமிழ் மக்களுக்கென சமூக ரீதியான அரசியல் ரீதியான துணிச்சலான தீர்மானங்களை மேற்கொள்ளும் திராணி அவர்களுக்கு இருக்கிறதா?. தமிழ் மக்கள் இவர்களை நம்பி வாக்குகளை மாத்திரம் போட்டுக்கொண்டு கட்டமைப்பற்ற கொள்கையற்ற திறந்தவெளி இனமாக இப்படியே காலத்தைக் கடத்தி எமது பிரதேசங்களையும் பறிகொடுத்துக் கொண்டிருக்கப்போகிறோமா?

இன்று தமிழர் பிரதேசங்கள் போதைப் பொருட்களால் நிரம்பி வழிகிறது. பாடசாலை மாணவர்களும், இளைஞர் யுவதிகளும் அடிமைகளாக்கப்படும் நிலை தொடர்கின்றது. கடந்த வருடங்களில் மிக மோசமான சமூக சீர்கேடுகள் வடக்கிலும் அதிகரித்து வருவதை செய்திகள் ஊடாக அறிகிறோம். இன்றைய அரசியல்வாதிகளை நம்பி தமிழினம் எதனையும் செய்ய முடியாது. தாமாக இளைஞர் யுவதிகள் முன்வந்து தமக்கானதொரு வலுவான சமூகக் கட்டமைப்பை உருவாக்கி, அரசியல் மற்றும் ஏனைய விடயங்களில் தீர்மானங்களை எடுக்கும் சக்திகளாக உருவெடுப்பது தமிழினத்தின் எதிர்கால இருப்புக்கு மிகவும் அவசியம்.



## உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு கோரல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வேட்புமனுக்களை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கோருவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வேட்புமனுக்கள் 21 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## கேகாலையில் கொவிட் தொற்றுடன் மூவர் அடையாளம் - பொது மக்களுக்கு எச்சரிக்கை

கேகாலை மாவட்டத்தில் இருந்து கொவிட்-19 தொற்றுக்குள்ளான மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கேகாலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து குறித்த கொவிட் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். இதேவேளை, கொவிட்-19 தொற்றுக்குள்ளான 05 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் படி, நாட்டில் பதிவாகியுள்ள மொத்த கொவிட் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 671,903 ஆகும். நேற்றைய தினம் கொவிட் தொற்றுக்குள்ளான மரணங்கள் எதுவும் பதிவாகவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

சீனாவில் மீண்டும் உருமாறிய கொவிட் வைரசின் தாக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக உலக நாடுகள் பயணக் கட்டுப்பாடுகளில் சில நடைமுறைகளைப் பின்பற்ற ஆரம்பித்துள்ள சூழலில், இலங்கையில் மீண்டும் கொவிட் தொற்றுடன் நபர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.




## அதிகரிக்கப்பட்ட பெற்றோலின் வரி

நாட்டில் ஒக்டேன் 92 மற்றும் ஒக்டேன் 95 வகை பெற்றோல் லீற்றர் ஒன்றின் வரி 27 ரூபாவில் இருந்து 52 ரூபாவாகவும், சுப்பர் டீசலின் வரி 13 ரூபாவில் இருந்து 38 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், குறித்த வரி சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு இன்னும் அறிவிக்கப்படவில்லை.





## இலங்கையை வீழ்த்திய இந்தியா

இலங்கைமற்றும்இந்தியஅணிகளுக்குஇடையிலானமுதலாவது ரி20 போட்டி நேற்று வான்கடே மைதானத்தில் இடம்பெற்றது. நாணய சுழற்சியை வென்ற இலங்கை முதலில் பந்துவீசியது.

இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்களை பெற்றது. இந்தியாவின் தீபக் ஹூடா ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார்.

இலங்கைக்கு 163 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட, 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 160 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். இலங்கை அணி சார்பில் அணித்தலைவர் 45 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். சிவம் மாவி 4 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். அதனடிப்படையில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

## சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்ப பிரிவு திறந்து வைப்பு

(அபு அலா)

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப நாம் அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளவும், அதேபோன்று தகவல்களையும் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (03) குறித்த அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் எமது வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கலாம் என்றார்.

இந்நிகழ்வில், அமைச்சின் கணக்காளர் எஸ்.சட்குணேஸ்வரன், திட்டமிடல்பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிருவாகஉத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.விஜயகுமார் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## ஓய்வுபெறும் வயதெல்லை மறுசீரமைப்பு

அரசஊழியர்கள்ஓய்வுபெறும்வயதெல்லையைமறுசீரமைப்பதுதொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரிகளின் ஓய்வு பெறும் கால எல்லையை 65 ஆக அதிகரிப்பதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன தெரிவித்துள்ளார். தாதியர், விசேட வைத்தியர்கள், ரயில் சாரதிகள் உள்ளிட்ட துறைகள் இதில் அடங்குகின்றன. கடந்த 31 ஆம் திகதி 30 ஆயிரம் அரச ஊழியர்கள் ஓய்வு பெற்றனர். நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் காணப்படுவதாகவும், அரச ஊழியர்கள் செயல்திறன் மிக்கவர்களாக செயல்படுவது அவசியமாகும். எதிர்காலத்தில் அரச ஊழியர்களுக்காகவும் அவர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காகவும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு – யாழ்ப்பாணம் இரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதால் அதன்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்று போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தலைவர் இ.இரவீந்திரன் தெளிவுபடுத்தினார்.

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில், வவுனியா மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களிற்கிடையேயான தண்டவாளப் பாதையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவிருப்பதால் ஜனவரி 5 ஆம் திகதியில் இருந்து இப்பாதையின் ஊடான புகையிரத சேவைகள் இடைநிறுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் - கொழும்பு இற்கிடையே யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட புகையிரத சேவைகள் யாவும் அனுராதபுரத்திலிருந்து ஆரம்பித்து கொழும்பு வரை தமது சேவையைத் தொடரும். அதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை யாழ் ராணி புகையிரத சேவை இடம்பெறும். இதன் காரணமாக தலைமன்னார் - கொழும்பிற்கு இடையிலான புகையிரத சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**இக்காலத்தில் பயணிகள் பின்வரும் 3 வழிகளில் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்.**

**1. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை புகையிரதத்தில் சென்று பின்னர் வவுனியாவிலிருந்து அனுராதபுரம் வரை பேருந்தில் சென்று பின்னர் மீண்டும் அனுராதபுரத்திலிருந்து கொழும்பு வரை புகையிரதத்தில் பயணிக்க முடியும்.**

**2. வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலிருந்து பேருந்தில் அனுராதபுரம் வரை பயணித்து பின்னர் அனுராதபுரத்திலிருந்து கொழும்பு வரை புகையிரதத்தில் பயணித்தல்.**

**3. யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களிலிருந்து நேரடியாக கொழும்பிற்கு பேருந்தில் பயணித்தல்.**

மேற்குறித்த 3 வழிகளையும் அடிப்படையாக வைத்து ஆளுநரின் வழிநடத்தலின் கீழ் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களின் பங்களிப்புடன் பின்வரும் மேலதிக போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிசொகுசு, சொகுசு, அரைசொகுசு பேருந்துகள் உள்ளடங்களாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் வழி அனுமதிப்பத்திரம் பெற்ற 38 பேருந்துகள் தற்போது யாழ் - கொழும்பு வழித்தடத்தில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. பயணிகள் இவற்றிற்கான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கான வழிகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் மேலதிக கேள்விக்கு ஏற்ப பேருந்து சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாணத்தில் உள்ள எல்லா டிப்போ சாலைகளில் இருந்தும் அனுராதபுரத்திற்கான சேவையை மேற்கொள்வதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் 28 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் யாழ் - கொழும்பு வழித்தடத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட 33 பேருந்துகள் பயணிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தமது சேவையை இடை நிறுத்தியிருந்தனர். இப்பேருந்துகளை இயக்குவதற்கும், தற்போது ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளும் உரிமையாளர்களின் ஊடாக அவற்றிற்கான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம் - அனுராதபுரம் மற்றும் வவுனியா - அனுராதபுரம் ஆகிய வழிகளில் பயணிகளின் கேள்வி அதிகரிப்பிற்கு ஏற்ப தொடர்ச்சியாக சேவையாற்ற முன்வந்துள்ளன.

வடமாகாணத்தில் மாவட்டங்களிற்கு இடையேயான சேவைக்கு அனுமதிப்பத்திரம் பெற்று வருமானக்குறைவு காரணமாக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடாமல் 25 பேருந்துகள் உள்ளன. தேவை ஏற்படும் பட்சத்தில் இப்பேருந்துகளிற்கும் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கி அவற்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயணிகள் தமக்கு தேவையான ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்காக, ஏற்கனவே உள்ள ஆசனப்பதிவு உரிமையாளர்களின் ஊடாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசனப்பதிவுளை மேற்கொள்வதற்கான தொடர்பு இலக்கங்கள் பொது மக்களுக்கு பத்திரிகைகள் ஊடாக அறிவிக்கப்படும். அத்தோடு யாழ் மத்திய பேருந்து நிலையத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

இவ் ஒழுங்குகளுடன் தேவைக்கு ஏற்றவாறு மேலதிக ஒழுங்கு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு யோ.நோபெட் ரவிச்சந்திரன் - போக்குவரத்து உத்தியோகத்தர் - 0772385784, சி. சித்ராங்கன் - பேருந்து நிலைய பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் - 0765378432, ஈ. கோபிதன் - பேருந்து நிலைய பொறுப்பதிகாரி - வவுனியா - 0779276242 ஆகியோரை தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.